(vi) கைத்தறி உற்பத்திக்கான முக்கிய பொருட்கள்
(vii) நூலின் பொதுவான பயன்பாட்டினை அடையாளம் காணுதல்.
(viii) பசையிடல் (pasting), வெளிற்றுதல் (bleaching), நிறமூட்டல் (colouring), சாயமிடல் (dyeing)ஆகியவற்றின் செயற்பாட்டு முறைகளை அடையாளம் காணுதல்.
(ix) நெசவுப் பொருள் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பும் விரிவுபடுத்தலும்.
(x) நெசவு உபகரணங்களை பயன்படுத்தலும் அவற்றின் பெயர்களும் பயன்பாட்டுச் செயற்பாடும்.

**(b) <u>கைத்தறி இயந்திர வரைபும் துணித் தயாரிப்பு வடிவமைப்பு வரைபும்</u>**

(i) இடக்கை பக்க உயர்வு
(ii) இருப்புநிலைத் தடியின் பக்கப்பார்வையின் முன் பக்கம் (Front side of a status baton side view)
(iii) நாடா (Shuttle) பெட்டியின் நீளமும் அகலமும்
(iv) பாவு சுற்றியின் (warp roller), பாவு தாங்கிச் சட்டம் (Beam Stand), பிடி சட்டம் (heg), தார் குழல் படலை (grill) அகியவற்றிற்கான அளவீட்டு வரைபு
(v) இரு மிதி பலகைளில் துவாய் நெசவு வடிவமைப்பு (Towel weaving design in two paddles)
(vi) விழுது அமைப்பு முறை (Method of Heels set setting)
(vii) 2,4,6,8 விழுது அமைப்பு முறை (Method of 2,4,6,8Heels set setting)

**குறிப்பு**: ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பரீட்சையிலும் மிகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற வேண்டும். எவ்வாறெனினும், மேலே குறிப்பிட்ட புள்ளியின் வரையறையின் காரணமாக நிலவும் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம் மற்றும் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் சித்தி பெறுவதற்கான புள்ளி வரையறையை குறிப்பிட் அளவு வரை குறைப்பதற்கு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

**9.2. தொழில்சார் பரீட்சை :**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்** | **காலம்** | **உச்சப் புள்ளி** | **சித்தியடைவதற்கான புள்ளி** |
|---|---|---|---|
| ***(a) கைத்தறியினை முறைப்படுத்தல்***<br>• நூலை அடையாளம் காணுதல்<br>• பாவு நூல் சுற்றலும் ஊடை நூல் சுற்றலும்<br>• பாவோடல் | 30 நிமிடங்கள் | 50 | 40 |
| ***(b) நெசவு***<br>• மிதி பலகைத் தொடர்பு அமைப்பு முறை<br>• நெசவு செயன்முறை | 45 நிமிடங்கள் | 50 | |
| **மொத்தம்** | | **100** | |

**9.3** பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும்.

10. **பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 600/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டுகள் ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

